**பவானி நகராட்சி 30.06.2023-ம் தேதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள் தீர்மானத்தின் உண்மை நகல்**

**பொருள் எண்**:1

நகராட்சி ஆணையாளர் அவர்களின் மே 2023ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**அலுவலககுறிப்பு:**

மன்றம் பார்வையிடப்பட்டது.

**மன்றத்தீர்மானஎண்** : 21பார்வையிடப்பட்டது

**பொருள் எண்**:2

நகராட்சி பொறியாளர் அவர்களின் மே 2023ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**அலுவலககுறிப்பு:**

மன்றம் பார்வையிடப்பட்டது.

**மன்றத்தீர்மானஎண்** : 22பார்வையிடப்பட்டது

**பொருள் எண்**:3

இந்நகராட்சியின் அலுவலக உபயோகத்திற்கு 2023-2024-ம் ஆண்டிற்கு தேவையான எழுது பொருட்கள் மற்றும் பதிவேடுகள், பாரங்கள் வாங்கிக் கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் தொகை ரூ.4,80,000/- (ரூபாய் நான்கு இலட்சத்து எம்பதாயிரம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலககுறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்

**மன்றத்தீர்மானஎண்** : 23பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது **(ந.க.எண் 403/2023/டி.2)**

**பொருள் எண்**:4

இந்நகராட்சியில்உள்ளஅனைத்துகணினிகள்கொள்முதல்செய்யப்பட்டு 10ஆண்டுகளுக்குமேலாகிவிட்டதால்அடிக்கடிபழுதுஅடைந்துவிடுகிறது. இதனால்அரசுக்கும், நகராட்சிநிர்வாகஇயக்குனர்சென்னை, நகராட்சிநிர்வாகமண்டலஇயக்குனர்திருப்பூர், மாவட்டஆட்சிதலைவர்ஈரோடுமற்றும்இதரஅலுவலகங்களுக்குஅறிக்கை (GOOGLE SHEET, PPT, EXCEL SHEET)உடன்அனுப்புவதில்சிரமம்ஏற்படுகிறது.மேலும்அலுவலகஅனைத்துபணிகளும் UTIS இணையவழிமென்பொருள்களில்மேற்கொள்ளப்படுவதால்ஒவ்வொருஇருக்கைக்கும் UTIS Employee ID உபயோகிக்கதனித்தனியேகணினிகள்தேவைப்படுகிறது.

எனவேஅரசுஅனுமதிக்கப்பட்ட GEM விலையில்கணினிகள், Anti-Virus Soft wareமற்றும்அதன்சார்ந்தஉதிரிபாகங்கள்கொள்முதல்செய்யஏற்படும்உத்தேச செலவினம்ரூ.4.85 இலட்சத்திற்குமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்

<u>**மன்றத்தீர்மானஎண் : 24**</u>ஜெம் விலையில் கொள்ள முதல் செய்ய அனுமதிக்கப்பட்டது **(ந.க.எண் 807/2023/E1)**

**பொருள் எண்:5**

இந்நகராட்சிபயன்பாட்டில்இருக்கும்அனைத்துகணினிகள், பிரின்டர்கள்மற்றும் Xerox Machine ஆகியவற்றில்அவ்வப்போதுஏற்படும்பழுதுகளைசரிசெய்யவும்வருடாந்தரபராம ரிப்புபணிமூலம்சரிசெய்துஉடனேபயன்பாட்டிற்குகொண்டுவரஏற்படும்உத்தேச செலவினம்ரூ.4.50 இலட்சத்திற்குமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்

<u>**மன்றத்தீர்மானஎண் : 25**</u>வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது. **(ந.க.எண் 807/2023/E1)**

**பொருள் எண்:6**

இந்நகராட்சியில்உள்ளஅனைத்துபிரிண்டர்கள்,கலர்பிரிண்டர்கள்,ஜெரா க்ஸ்இயந்திரம்மற்றும்தேவையானஉபகரணங்கள்கொள்முதல்செய்யப்பட்டு 10ஆண்டுகளுக்குமேலாகிவிட்டதால்அடிக்கடி பழுதுஅடைந்துவிடுகிறது.மேலும் சொத்துவரி, குடிநீர்கட்டணம், தொழில்வரிகட்டணம்ஆகியவரிவசூல்பணிகளுக்குகேட்புகள்பிரின்ட்செய்யவு ம்மின்னஞ்சல்தபால்கள்பிரின்ட்எடுக்கவும்பிறதுறைகளுக்குகடிதங்கள்அனுப் பவும், தேர்தல்போன்றஅவசரபணிகளில்கடிதங்கள்பிரின்ட்எடுக்கவும், மாதாந்திரஅறிக்கைகள்அனுப்பதல்மற்றும்வளர்ச்சிதிட்டப்பணிகளுக்குமுன் மொழிவுகள்தயார்செய்துபிரின்ட்எடுத்தல். Colour Printer, B&W printer மற்றும் Xerox Machine கொள்முதல்செய்யஏற்படும்உத்தேசசெலவினம்ரூ.4.90 இலட்சத்திற்கு ஒப்பந்தபுள்ளி கோரவும் மன்றத்தில் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்

<u>**மன்றத்தீர்மானஎண் : 26**</u>ஒப்பந்தபுள்ளி கோரி கொள்முதல் செய்ய அனுமதிக்கப்பட்டது. **(ந.க.எண் 807/2023/E1)**

**பொருள் எண்:7**

இந்நகராட்சிக்குட்பட்டபகுதிகளில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் நடைபெற்றுவரும்பணிக்களை திட்ட மேலாண்மை ஆலோசகர் (Project Management Consultancy) மூலமாக கண்காணித்தல் மற்றும் மேற்பார்வையிடுதல் பணிக்கு குறுகியகால மின்னனு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை 20.05.2023 ஆம்தேதியதினசரிநாளிதழானமலைமலரில்பிரசுரம்செய்யப்பட்டது. மேற்படிவிளம்பரம்செய்யப்பட்டதற்கானசெலவினம்ரூ.4788/- "MALAR PUBLICATIONS LIMITED, ERODE" நிறுவனத்திற்குவழங்கமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.

<u>**மன்றத்தீர்மானஎண் : 27**</u>நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கான தொகையினை அனுமதிக்கப்பட்டது. **(ந.க.எண் 1214/2021/இ1)**

**பொருள் எண்:8**

பவானி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் வாயிலாக நகரின் சுகாதாரத்தை பராமரிக்கவும் தென்மேற்கு பருவமழை காலங்களில் ஏற்படும் தொற்றுநோய்களை தடுத்திடவும் பவானி நகரின் இருபுறமும் ஆறுகள் உள்ளதால் மழைகாலங்களில் ஏற்படும் வெள்ளத்தடுப்புப் பணிகளுக்கும் நகரில் அமைந்துள்ள புகழ்பெற்ற சங்கமேஸ்வரர் திருக்கோவிலுக்கு வரும்பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் சுத்தம் செய்து கிருமி நீக்கம் செய்யவும் பேருந்து நிலையம், பொதுக் கழிப்பிடம், சமுதாய கழிப்பிடம் போன்றவற்றினை தூய்மையாக பராமரிப்பு செய்திடவும் தேவைப்படும் கிருமி நாசினி பொருட்களான பிளீச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்புத்தூள், பினாயில்

போன்ற பொருட்களை பொது சுகாதார அவசர அவசியம் கருதி அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனத்தின் வாயிலாக கொள்முதல் செய்யவும் இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலககுறிப்பு:**

பொது சுகாதாரப்பிரிவு அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்

**மன்றத்தீர்மானஎண் : 28**பொது சுகாதார அவசர அவசியம் கருதி கூட்டுறவு நிறுவனத்தின் வாயிலாக கொள்முதல் செய்ய அனுமதிக்கப்பட்டது.

**(ந.க.எண்:824/2023/எச்1)**

**பொருள் எண்:9**

பவானிநகராட்சிபகுதிகளில்காவேரிஆற்றுநீரினைஆதாரமாககொண்டு 4.2 MLD குடிநீர்சுத்திகரிப்புசெய்யப்பட்டுதினந்தோறும் 107 LPCD வீதம்குடிநீர்விநியோகம்பொதுமக்களுக்குசெய்யப்பட்டுவருகிறது.

மக்களுக்குதங்குதடையின்றிகுடிநீர்விநியோகம்செய்யஏதுவாகஅவ்வப்போது ஏற்படும்பழுதுகளைசரிசெய்யவேண்டியுள்ளது.

நிர்வாகஅனுமதிபெற்றுஒப்பந்தப்புள்ளிகோரிபணிமேற்கொள்ளகாலதாமதம்ஏற்படும்என்பதால்குடிநீரின்அவசரஅவசியம்கருதிகீழ்கண்டமூன்றுபணிகள் மற்றும் அலுவலகபயன்பாட்டில்உள்ளகணினிகள்மின்தடைஏற்படும்பொழுதுதங்குதடையின்றிஇயங்கஏதுவாக UPS பழுதுநீக்கம்செய்யப்பட்டுள்ள பணி மேலும்2023-2024-ஆம் ஆண்டிற்கு சொத்துவரி கேட்பு அறிவிப்பு Print எடுத்தமைக்கான பணி என மொத்தம் 5 பணிகளை நகராட்சிகளின்சட்டம் 1998 பிரிவு 57(7)-ன்கீழ்மேற்கொள்ளப்பட்டதைமன்றத்தின்பார்வைக்கும்பதிவிற்கும்வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின்பெயர் | மதிப்பீட்டுத் தொகைரூ. | செலவினத் தொகைரூ. |
|---|---|---|---|
| 1 | பவானிநகராட்சிவார்டுஎண்.2, தலைமைநீரேற்றுநிலையத்தில்உள்ள Raw Water | 40,000/- | 39,500/- |

| | | | |
|---|---|---|---|
| | கிணற்றிற்குவரும்நீரின்அடைப்பினை போர்வெல்ரிக்இயந்திரம்மற்றும் JCB மூலம்அகற்றும்பணி. **(ந.க.எண்.1684/2022/இ1)** | | |
| 2 | பவானிநகராட்சிவார்டுஎண்.2,4 மற்றும் 8 பகுதிகளில்உள்ள 200mm, 200mm, 160mm சுலீஸ்வால்வுகளைபழுதுநீக்கம்செய்து பொருத்துதல்பணி. **(ந.க.எண்.198/2023/இ1)** | 40,000/- | 39,800/- |
| 3 | பவானிநகராட்சிதலைமைநீரேற்றுநிலைய த்தில்உள்ள 50HP Clear Water Motor Unit no.2-இல்ஏற்பட்டுள்ளபழுதுகளைநீக்கம்செய்த ல்பணி. **(ந.க.எண்.582/2023/இ1)** | 1,40,000/- | 1,33,930/- |
| 4 | பவானிநகராட்சிஅலுவலகத்தில்உள்ள UPS-இல்ஏற்பட்டுள்ளபழுதுகளைநீக்கம்செய்த ல்பணி. **(ந.க.எண்.603/2023/இ1)** | 17,000/- | 16,900/- |
| 5 | 2023 -2024 ஆம் ஆண்டிற்கு சொத்துவரி கேட்பு அறிவிப்பு Print எடுத்தமைக்கான தொகை. **(ந.க.எண்.1138/2022/அ1)** | 20,428/- | 20,428/- |

**அலுவலககுறிப்பு:**

மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**மன்றத்தீர்மானஎண் : 29**நகராட்சிகளின் சட்டம் 1998 57(7)கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள் பார்வையிடப்பட்டு பதிவு செய்யப்பட்டது

**(ந.க.எண்:1684/2022/இ1)**

**பொருள் எண்:10**

இந்நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களுக்கு அவ்வப்போது தேவைப்படும் மின் உபகரனங்களை அரசு அங்கரீக்கப்பட்ட சிந்தாமணி கூட்டுறவு சிறப்பு அங்காடி மூலம் கொள்முதல் செய்து பயன்படுத்திக்கொள்ள

ஆகும் செலவினங்களுக்கு உத்தேச செலவினம் ரூ.1.50 லட்சத்திற்குமன்றத்தின்அனுமதி வேண்டப்படுகிறது..

**அலுவலககுறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றத்தீர்மானஎண் : 30</u>** சிந்தாமணி கூட்டுறவு சிறப்பு அங்காடியில் கொள்முதல் செய்ய அனுமதிக்கப்பட்டது. **(ந.க.எண்**:682/2023/இ1)

**பொருள் எண்**:11

இந்நகராட்சியில் 2023-2024 ஆம்நிதியாண்டில் நடைபெற்று வரும் அம்ரூத் 2.0 திட்டம், நமக்கு நாமே திட்டம், 15வது மாநில நிதிக்குழு திட்டம், திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் தூய்மை இந்தியா திட்டங்கள் குறித்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர், திருப்பூர் அவர்களால் ஆய்வு மேற்கொள்ளும் பொழுதுஅவர்களின் ஈப்புவாகனங்களுக்கு டீசல்பயன்பாட்டிற்கான ஏற்படும் செலவினங்களுக்கு மன்றத்தின்ஒப்புதலுக்குவைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்..

**<u>மன்றத்தீர்மானஎண் : 31</u>**ஈப்பு வாகன டீசல் செலவினங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது **(ந.க.எண்**:838/2023/இ1)

**பொருள் எண்**:12

இந்நகராட்சிக்குட்பட்டபகுதிகளில்நடைபெற்றுவரும்திட்டப்பணிகளை குறித்தவிபரம் 13.05.2023 ஆம்தேதியதினசரிநாளிதழானமலைமலரில்பிரசுரம்செய்யப்பட்டது. மேற்படிவிளம்பரம்செய்யப்பட்டதற்கானசெலவினம்ரூ.7200/- "MALAR PUBLICATIONS LIMITED, ERODE" நிறுவனத்திற்குவழங்கமன்றத்தின்ஒப்புதலுக்குவைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றத்தீர்மானஎண் : 32</u>**விளம்பர தொகை வழங்கியதை அனுமதிக்கப்பட்டது **(ந.க.எண் 425/2022/இ1)**

**பொருள் எண்:13**

பவானி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் எரியும் தன்மையுடைய பிளாஸ்டிக் கழிவுகளை அறிவியல் முறைப்படி அப்புறப்படுத்த எரியூட்டும் இயந்திரம் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள உரக்கிடங்கில் நிறுவப்பட்டுள்ளது. மேற்படி இயந்திரம் செயல்பாட்டிற்கு கொண்டு வர தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் பெருந்துறை அவர்களிடமிருந்து அனுமதி பெற தொகை ரூ.8800/- செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் பெருந்துறை அவர்களுக்கு தொகை ரூ,8,800/-செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்

**<u>மன்றத்தீர்மானஎண்</u>** <u>: 33</u>தொகை செலுத்தியதை அனுமதிக்கப்பட்டது.

**(ந.க.எண் 1753/2015/எச்1)**

**பொருள் எண்:14**

மேட்டூர் மெயின் ரோட்டில் அமைந்துள்ள மேல்நிலை குடிநீர் தொட்டி மூலம் பாதுகாக்கப்பட்டகுடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குடிநீர் சம்மந்தம்மான பொருட்கள் வைக்கப்பட்டுள்ளது. குடிநீர் விநியோகம் வளாகத்திற்குள் வெளிநபர்கள்,பொதுமக்கள் அனுமதியின்றி வந்து செல்கின்றனர், எனவே பொருட்களை பாதுகாக்கும் பொருட்டு சுற்று சுவர் அமைத்து பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.4.00 இலட்சம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலககுறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்..

**<u>மன்றத்தீர்மானஎண்</u>** <u>: 34</u>பணியினை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.

**(ந.க.எண்:848/2023/இ1)**

**பொருள் எண்:15**

மேட்டூர் மெயின் ரோட்டில் அமைந்துள்ள ஆணையாளர் குடியிருப்பு வளாகத்தில் அமைந்துள்ள நகராட்சி கடைகளுக்கும் காவல் நிலையத்திற்கும் இடைப்பட்ட நகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தில் கடைகளை அமைத்து

நகராட்சிக்கு வருவாய் உயர்த்தும் பொருட்டு. கடைகளை கட்டுவதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.15.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது.மேற்கண்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்..

<u>**மன்றத்தீர்மானஎண் : 35**</u>கடைகள் கட்ட ஏற்படும் செலவினங்களுக்கு அனுமதிக்கப்பட்டது **(ந.க.எண்**:849/2023/**இ**1)

**பொருள் எண்**:16

பொது சுகாதார பிரிவில் பராமரிக்கப்பட்டு வருகின்ற டிராக்டர் வாகனம் எண். TN36 BZ 9472க்கு வாகனத்தின் முன்புறம் ஹைட்ராலிக் இயந்திரம் பொருத்தி நகரில் பள்ளமான இடங்களை சமன் செய்யவும், சாலை ஓரங்களில் உள்ள புற்களை சுத்தம் செய்யவும், மேடுபள்ளங்களை சமன் செய்யவும், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி வளாகங்களில் காணப்படும் புற்களை சுத்தம் செய்யவும், நுண்உர மையத்தில் அமைக்கப்பட்டுள்ள மக்கும் கழிவுகளை வின்ரோ முறையில் செயல்முறை படுத்தவும் போன்ற இதர பணிகளை மேற்கொள்ள எளிதாக இருக்கும் வகையில் வாகனத்தில் மாற்றம் செய்திடவும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ளவும் இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

பொது சுகாதாரப்பிரிவு அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

<u>**மன்றத்தீர்மானஎண் : 36**</u>செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது

**(ந.க.எண்**:850/2023/**எச்**1)

**பொருள்எண்**:17

பவானி நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் பிரிவில் பம்ப் ஹவுஸ் கிளினர், ரிசர்வயர் கிளினர், மேல்நிலை தொட்டி இரவு காலவர், பில்டர் பெட் கிளினர், குழாய் பொருத்துனர், மின்பணியாளர் ஆகிய பணி இடங்களுடன் பராமரிக்கப்பட்டு வந்தது. தற்போது அரசாணை எண். 10, நாள். 23.01.2023 படி அனைத்து பணியிடங்களையும் நீக்கி விட்டு ஒரு மின்பணியாளர் மட்டுமே

தோற்றுவிக்கப்பட்டுள்ளது. ஒரு பணியாளருடன், தலைமை நீரேற்று நிலையத்தை பராமரிக்கவும், இயக்கவும் முடியாத நிலை உள்ளது. இதனால் குடிநீர்விநியோகம் பாதிப்படையும் நிலையில் உள்ளது. எனவே, குடிநீர் அவசியம் அவசரம் கருத்தில் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் மூன்று பணியாளர்களை மூன்று மாதத்திற்கு (ஜூலை 2023 முதல் செப்டம்பர் 2023 வரை) பணியமர்த்தி கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1,80,000/-ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

1. மன்றம்அனுமதிக்கலாம்.

2.குடிநீர் விநியோக அவசர அவசியம் கருதி நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு ஒப்புதல் வழங்கலாம்.

**<u>மன்றத்தீர்மானஎண்</u>** <u>: 37</u>பணி அமர்த்திக்கொள்ள அனுமதிக்கப்பட்டது

**(ந.க.எண்.419/2023/இ1)**

**பொருள்எண்**:18

பவானி நகராட்சி பொறியியல் பிரிவில் பல்வேறு திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இப்பணிகளை கவனிக்க நகராட்சி பொறியாளர், மற்றும் பொதுப்பணிமேற்பார்வையாளர் ஆகிய இருவர் மட்டுமே உள்ளார்கள். . மேலும், அரசாணை எண். 10, நாள்.23.01.2023-இல் இரண்டாம் நிலை நகராட்சிகளுக்கு உதவிப்பொறியாளர் பணியிடத்திற்கு பதிலாக நகராட்சியின் நிலைகளுக்கேற்ப பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. நகராட்சி பொறியாளர் நிலை-3- 1, பணிமேற்பார்வையாளர்-1, படவரைவாளர் நிலைIII-1. பணிஆய்வர்-2 ஆகிய 5 எண்ணிக்கை பதவிகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தற்போது அம்ரூத் 2.0 மற்றும் நமக்கு நாமே திட்டப்பணிகள் நடைபெற்று வருவதாலும் திட்ட பணிகளுக்கு திட்டபிரேரணைகள் தயாரித்து அரசுக்கு கருத்துரு அனுப்ப வேண்டியுள்ளதாலும், அன்றாட பணிகளை கவனிக்க வேண்டியுள்ளதாலும், மூன்று மாதங்களுக்கு ஒரு தொழில்நுட்ப உதவியாளர்கள் மற்றும் பணி ஆய்வர், ஆகியோர்களை ஒப்பந்த அடிப்படையில் இரண்டு பணியாளர்களை மூன்று மாதத்திற்கு (ஜூலை 2023 முதல் செப்டம்பர் 2023 வரை) பணியில்

அமர்த்திக்கொள்ள ரூ.2,15,000/- செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்கான செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

3. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்

**மன்றத்தீர்மானஎண்** : 38பணி அமர்த்திக்கொள்ள அனுமதிக்கப்பட்டது.

**(ந.க.எண்.424/2022/E1)**

**பொருள்எண்:19**

பவானி நகராட்சியில் M/s. RGC Construction , சென்னை நிறுவனம் 5-ம் நிலை ஒப்பந்ததாரராக பதிவு செய்து தர வேண்டி விண்ணப்பித்துள்ளார். 2023-2024ம் ஆண்டிற்கு M/s RGC Construction , சென்னை நிறுவனத்தை 5-ம் நிலை ஒப்பந்ததாரராக பதிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றத்தீர்மானஎண்** : 39ஒப்பந்ததாரராக பதிவு செய்ய அனுமதிக்கப்பட்டது.

**(ந.க.எண்.813/2023/E1)**

(ஓம்).E.சிந்தூரி.
தலைவர்,
பவானி நகராட்சி.

/உண்மைநகல்/

ஆணையாளர்
பவானிநகராட்சி.